**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 24.06.2025**
**OS. No. 66/2019**
**வழக்கு சாட்சி DW.1– மாரியம்மாள், க/பெ.பாலகிருஷ்ணன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

17) இறந்துபோன 1ம் வாதி தாவா சொத்தை ஒத்திக்கு வாங்கியதாக சொல்லப்படும் விவரத்தை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 5, 6 மாதங்களுக்கு முன்பு தெரியவந்தது. எங்களது குடும்பத்தாரிடம் ஒத்திக்கு வாங்கப்பட்டதா அல்லது கிரையம் பெறப்பட்டதா என கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எங்கள் பூர்வீக சொத்தை பொறுத்து கடந்த 30.05.1996ம் தேதியில் நாராயணன் மற்றும் சின்னையன் தங்களுடைய மைனர்களுடன் சேர்த்து ராஜாமணி என்பவருக்கு ச.எண்.362/2ல் 25சென்ட் நிலத்தை கிரையம் கொடுத்தனர் என்றால் எனக்கு தெரியவில்லை. 10.07.1996ல் ராஜாமணியம்மாள் என்பவருக்கும் 16.07.1997ம் தேதியில் பரமசிவம் மற்றும் செந்தில் ஆகியோருக்கும் 08.05.2003ல் சரோஜா என்பவருக்கும், 03.11.1997ல் ராமசாமி என்பருக்கும், என்னுடைய சகோதரர்கள் விஸ்வநான், அங்கமுத்து ஆகியோர் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் எனக்கு தெரியவில்லை.

18) என் சகோதரர்கள் நாரயணசாமி, விஸ்வநாதன், அங்கமுத்து ஆகியோர்கள் அவர்களுக்கு பாகம் பிரிக்கப்பட்ட சொத்துக்கள் குறித்து கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றும், அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் சகோதரர்களிடமிருந்து கியைரம் பெற்ற நபர்க அவரவர் சொத்துக்களை சொசைட்டியிலும், வங்கியிலும் வைத்து கடன் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. என் சகோதரர்கள் சின்னையன் விஸ்வநாதன், அங்கமுத்து, நாராயணசாமி ஆகியோர் தங்களுடைய பாக சொத்துக்களை யார் யாருக்கு விற்பனை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை.

19) என் சகோதரர்களிடம் கிரையம் பெற்ற சொத்துக்களை கிரையம் பெற்ற நபர்கள் அனுபவத்தில் வைத்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எங்கள் பூர்வீக சொத்தாக நாங்கள் சொல்லப்படும சொத்தில் யாரேனும் விவசாயம் செய்து வருகிறார்களா என்றால் இல்லை, ஊர் மக்கள் ஆடு, மாடு மேய்த்து கொண்டுள்ளனர். எங்கள் பூர்வீக சொத்துக்கள் குறித்து யார் பெயரில் பட்டாக்கள் உள்ளது என்பது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா ொசத்தில் நான் கூரை வீடு கட்டி குடியிருந்து வருவதற்கு ஆதரவாக வரி ரசீது மற்றும் மின் கட்டண ரசீது போன்ற ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கேட்கவேண்டும். தாவா சொத்தில் ஒரு அட்டைபோட்ட வீடு உள்ளது என்றால் இல்லை. நான் சொல்வது தவறானது என்றும், தாவா சொத்தில் ஒரு அட்டை வீடு உள்ளது என்றும், அதில் வாதி தான் குடியிருந்து வருகிறார் என்றும், அதற்கான மின் கட்டணம் மற்றும வரி ரசீதுகள் அனைத்து வாதிகள் தான் முறையாக செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

20) தாவா சொத்தில் நானோ, என் குடும்பத்தினரோ போர்வெல் ஏதேனும் போட்டுள்ளனரா என்றால் போட்டுள்ளனர் அதை யார் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது, எந்த வருடம் போடப்பட்டது என்றும் எனக்கு தெரியாது. உண்மையிலேயே தாவா சொத்தின் அனுபவத்தில் நான் இருந்திருந்தால் தாவா சொத்தில் யார் எந்த வருடம் போர்வெல் அமைத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும், நான் அனுபவத்தில் இல்லாததால் தான் தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1ம் வாதி கிரையம் பெற்ற பிறகு, போர்வெல் அமைத்து தனது சுவாதீன அனுபவத்தில் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. செல்லமுத்து த/பெ. பெருமாள் படையாச்சி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மாரிமுத்து படையாட்சி மனைவி சின்னப்பாப்பாள், அவர்களது மகன் அங்கமுத்து, நாராயணசாமி, சின்னசாமி, விஸ்வநாதன் ஆகியோரை தெரியுமா என்றால் அவர்கள் என் தம்பி மற்றும் அண்ணன்கள் ஆவர்.

21) மேற்கண்ட சின்னப்பாப்பாள் என்பவர் என் தாயார் ஆவார். மேற்கண்ட 5 நபர்களும் சேர்ந்து 06.06.1973 ல் தாவா சொத்துக்களையும், இதர சொத்துக்களையும் சேர்த்து ச.எண்.362 ல் உள்ள 5.68 ஏக்கர் நிலத்தை பெருமாள் கவுண்டர் மகன் செல்லமுத்து என்பவருக்கு வட்டிக்கு ஆதரவாக குத்தகைக்கு கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. அந்த வட்டி கடனை என் தாயார் மற்றும் சகோதரர்கள் நீக்க முடியாததால் அ.வ.எண்.235/1988 என்ற வழக்கை சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, ஏலத்திற்கு கொண்டு வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அதன் படி தீர்ப்பு கடனான ரூ.37,000/–ம், மேலும் ரூ.25,500/– சேர்த்து ரூ.62,500/–ஐ 1ம் வாதியிடம் எனது சகோதரர்கள் பெற்று அந்த கடனை தீர்த்து தாவா சொத்தை வாதியின் பெயருக்கு 28.11.1990 ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

22) அதே ஆவணத்தில் கடன் தொகை ரூ.25,500/–யும், முதலில் பெற்ற ரூ.37,000/–யும் மைனர்களின் கல்வி செலவிற்காகவும், மைனர்களின் சவரட்சனைக்காகவும், குடுமப சில்லறை கடன்களை சரிக்கட்டவும் என் சகோதர்கள் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. அதே ஆவணத்தில் சொத்தை பொறுத்து எங்களுக்கு என்ன உரிமையும் இல்லை என்றும், சொத்தை பொறுத்து பின் வாரிசுகள் வழக்கு தாக்கல் செய்தால் அவர்களுக்கும் எந்த உரிமையும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. நாராயணன், சின்னயன், விஸ்வநாதன், அங்கமுத்து ஆகியோர்கள் சேர்ந்து என் தந்தையும், விஸ்வநாதன் மற்றும சின்னையன் அவர்களின் மைனர்கள் மற்றும் மற்ற சகோதரர்களின் மைனர்களையும் கிரையத்தில் தரப்பினராக சேர்த்து கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் அது எனக்கு தெரியவில்லை.

23) 06.06.1964 ல் என்னுடைய தந்தை, அவரது முதல் மனைவியின் மகன் வைத்தியலிங்கம் இரண்டாவது மனைவியின் மகன்களான நாராயணன், சின்னயன், விஸ்வநாதன், அங்கமுத்து ஆகியோர்கள் மைனர்களாக உள்ளதால் அவர்களது தாயார் அவர்களுக்காக காப்பாளராக இருந்து பதிவு செய்த பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் 1395/1964 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. அதன் அடிப்படையில் அந்த

பாகபிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை அவரவர்கள் பாகமாக பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 1964 ல் பாகபிரிவினை ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் நான் பிறக்வே இல்லை என்பதால் தான் என்னுடைய பெயரை பாகபிரிவினை பத்திரத்தில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிறப்பதற்கு முன்னதாகவே சொத்தை பொறுத்து எங்கள் குடும்பத்திற்குள் பாகபிரிவினை ஏற்பட்டதால் அந்த சொத்தை குறித்து பாகபிரிவினை கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

24) 1ம் வாதி வருவாய் ஆவணங்கள் மற்றும் வில்லங்க சான்றிதழ்களை முறையாக சரிபார்த்து கடந்த 28.11.1990 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றும், அதன் படி தாவா சொத்தை அவரும், அவரது குடும்பத்தாரும் அனுபவித்து வருகிறார்கள் என்றும், எனவே அதை தடுப்பதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பூர்வீக சொத்தில் அதிகாரம் இல்லாததால் தான் 06.06.1973 ம் தேதியிட்ட கடனுக்கு ஆதாயமாக ஏற்படுத்திகொடுத்த பத்திரம் 1375/1973 என்ற ஆவணத்தில் என்னை சேர்க்கவில்லை என்றும், அதேபோல் செல்லமுத்து என்பவர் தாக்கல் செய்த வழக்கிலும் என்னை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பாகபிரிவினை வழக்கான அ.வ.எண்.9/2013 ல் இந்த தாவா சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் மற்றும் என் மற்ற சொத்துக்களை பொறுத்து கிரையம் கொடுத்த ஆவணங்களையும் செல்லாது என்று எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான்.

25) இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகும் என் சகோதர்களிடம் கிரையம் பெற்ற நபர்களும் அடுத்தடுத்த தாவா சொத்துக்களை கிரையம் கொடுத்து அதில் பல வில்லங்க பதிவேடுகள் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் வாதி இறந்த பிறகு 2 முதல் 5 வாதிகள் தாவா சொத்தை உழுது கொண்டிருக்கும் போது நாங்கள் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. மரங்களை வாதிகள் தான் வெட்டியதால் நாங்கள் தடுத்தோம். வா.சா.ஆ.7 புகைப்படங்களில் டிராக்டர் வைத்து உழுவ வரும்போது தான் நான் தடுத்தேன் என்றால் சரியல்ல. பனைமரத்தை வாதிகள் வெட்டியதால் அதை

நாங்கள் தடுத்தோம். தாவா சொத்துக்கள் என் பூர்வீக சொத்து என்பதால் அதை வாதிகள் விவசாயம் செய்ய என்னால் அனுமதிக்க இயலாது.

26) வாதிகள் ஒவ்வொரு முறையும் விவசாயம் செய்ய முயற்சித்தபோதும் நாங்கள் அடியாட்களை வைத்து தடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் எங்கள் மீது குற்றவியல் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எங்களை காட்டுக்குள் வர அனுமதிக்காமல் எங்களையும், எங்கள் குடும்பத்தினரையும் அடித்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை வழக்கில் எனக்கும், என் சகோதரர்களுக்கும் பாகம் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் பூர்வீக சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்த அனைவரையும் நாங்கள் தடுத்தோம். தாவா சொத்தில் உரிமை கோர எங்களுக்கு உரிமை இல்லை என்றும், வாதிகளின் சொத்தை அடித்து பிடுங்குவதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முறைபடி வாதிகளுக்கு தான் பாத்தியப்பட்டது என்றும், அதனால் அவர்கள் அனுபவத்திலுள்ள சொத்தில் நாங்கள் இடையூறு செய்ய எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

27) பாகபிரிவினை வழக்கிலும் எனக்கு பாகம் கிடைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/−திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.